# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/82/2018** |
| **Sessions** | **:** | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | **:** | **PW 5 / LW 5** |
| **Name** | **:** | திருமதி. ஷீலாமேரி<br>காவல் ஆய்வாளர்<br>W15 AWPS, ராயபுரம் |
| **Father's/Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | |

**Date: 28/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது W15 அனைத்து மகளிர் காவல் நிலையம் ராயபுரத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த

2017ம் ஆண்டு திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 03.04.2017ம் ஆண்டு புகார்தாரர் ஜீவிதா நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று மனு ரசீது எண். 150/2017 மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு. விசாரணைக்கு பின்பு குற்றத்தின் தன்மை பொறுத்து நிலைய குற்ற எண். 10/2017 சட்டப்பிரிவுகள் 498 A, 406, r/w 34 இ.த.சா மற்றும் 4 of TNPHW ஆக பதிவு செய்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் புகார்தாரரான ஜீவிதா, பார்வதி, ஜெகநாதன், சரண் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்களை சென்னை உயர்நீதிமன்றத்தில் CRLOP No. 11059/2017 முன்ஜாமீன் பெற்றுள்ளனர். விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிர்தரப்பு குறுக்கு விசாரணை**

3. புகாரை எப்போது பெற்றீர்கள் என்றால் 03.04.2017 அன்று பெற்றேன். உங்களால் தான் இந்த வழக்கு முழுவதுமாக விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாணை செய்து இறுதி அறிக்கையும் என்னால் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. திருமணத்திற்கு பின் 25 நாட்கள் தான் புகார்தாரர் வேலூரில் இருந்தார் என்றும் பின்னிட்டு பெங்களூருக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் பொழுது புகார்தாரரின் கணவர் பெங்ளூரில் தான் இருந்தார் என்றால் சரிதான்.

4. 2012ல் திருமணமான பிறகு 2017ல் தான் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு புகார்தாரர் IIT சென்னையில் எத்தனை வருடம் படித்தார் என்று விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால் 3 வருடம் கோர்ஸ் படித்துள்ளார். அந்த 3 வருடகாலத்தில் அவருடைய மாமியார் அரவணைப்பில் தான் வேலூரில் இருந்தது என்றால் சரிதான். 11.09.2016 அன்று தான் அந்த குழந்தையை அங்கிருந்து எடுத்துச்சென்றார்கள் என்றால் சரிதான்.

5. 11.09.2016 அன்று தான் எதிரியின் தங்கையின் திருமணம் வேலூரில் நடந்தது அப்போது தான் குழந்தையை இங்கு எடுத்து வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 2015ல் பெங்ளூரைவிட்டு சென்னைக்கு வந்து புகார்தாரர் பணி செய்தார் என்றால் சரிதான். பெங்களூர் வீட்டில் புகார்தாரர் தனியாக தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். 2015 வரை புகார்தாரர் சீதனம் கேட்டு கொடுமை செய்தார்கள் என்று பெங்களூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. புகார்தாரர் அவரது பெற்றோருக்கு இவ்வாறு கொடுமை செய்கிறார்கள் என்று ஏதேனும் கடிதம் எழுதியுள்ளாரா என்பது பற்றி நீங்கள் தெரிந்துகொண்டீர்களா என்றால் போனில் தான் தகவல் கொடுத்ததாக சொன்னார்.

6. புகார்தார்ரின் கணவர் Joint Commissioner க்கு கொடுத்த புகார்பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. 22.03.2017 குழந்தையை எடுத்து சென்று விட்டார்கள் என்று தான் உங்களிடத்தில் புகார் மனு கொடுத்தார்கள் என்று புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். காயச்சான்றுகள் ஏதேனும் அதில் பெறப்பட்டதா என்றாலும் அல்லது கொடுக்கப்பட்டதா என்றாலும் இல்லை. 22.05.2017 அன்று தான் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். CSR எண் 150/2017 ஆகும். புகாரின் இறுதி பத்தியில் என்ன பரிகாரத்திற்காக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என்னுடைய சீதன பொருட்களை திரும்ப பெற்று தருமாரும், எனக்கும் எனது குழந்தைக்கும் அவர்களால் ஏற்படும் பிறச்சனையை தீர்த்து பல கொடுமைகளையும் சித்திரவதைகளையும் செய்த எனது கணவர், மாமியார், மாமனார் மற்றும் நாத்தனார் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று இருந்தது. இந்த புகார் உண்மைதான என்று எதிரிகளை விசாரணை செய்து வாக்கு மூலம் ஏதாவது பதிவு செய்தீர்களா என்றால் இல்லை. புகார் சம்பந்தாக பெங்களூர் சென்று அவர்கள் வீட்டருகே யாரேனும் விசாரணை செய்தீர்களா என்றால் இல்லை.

7. ஆனால் நீங்கள் தான் பெங்களூரு சென்று சீதன பொருட்களை பெங்களூரு போலீசார் முன்னிலையிலும் சாட்சிகள் முன்னிலையில் வாங்கி கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். புகாரில் கொடுக்கப்பட்டதற்கான உரிய சட்டப்பிரிவுகளை உங்கள் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்றாலும் பொறுத்தமில்லாத சட்டப்பிரிவுகளை தான் போட்டுள்ளீர்கள் என்றாலும் உரிய விசாரணை

செய்யாமல் இவ்வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

8. இவ்வழக்கு பொய்யான வழக்கு என்றாலும் அவசர நிலையில் விசாரித்துள்ளீர்கள் என்றாலும் புகார் என்றே அ.சா.1, 2, 3 ஐ விசாரணை செய்துவிட்டீர்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகளை விசாரணை செய்து பதிவு செய்த வாக்கு மூலங்கள் எதையும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.11.28 15:11:20 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**